தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | : | 115/2024 | சாட்சியம் | : | **PW1** |
| **Name** | : | திரு.மணிகண்டன் | | | |
| **Date** | : | **01.09.2025** | | | |
| **Time** | : | **11.58 a.m to 1.13 p.m** | | | |

ம.த.சா.**1.**திரு.மணிகண்டன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 04.07.2011 ல் வேலைக்கு சேர்ந்தேன். பயிற்சி பெறுபவராக வேலைக்கு சேர்ந்தேன் என்றால் ஆமாம். பயிற்சி காலம் இரண்டு வருடங்கள் என்றால் ஆமாம். பயிற்சி காலம் முடிந்த பிறகு 2.7.2013 இல் என்னை தகுதிக்காண் பருவத்தில் வைத்தார்கள் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தொழிலாளர்கள் முதலில் பயிற்சியாளர்களாக நியமிக்கப்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்டு பின்னர் நிரந்தர தொழிலாளர்கள் ஆக்கப்பட்டார்கள் என்றால் ஆமாம். நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்த பிறகு ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பில் உறுப்பினராக சேர்ந்தேன். 7.10.2015 ல் உறுப்பினராக சேர்ந்தேன் தொழிற்சங்கத்தில் சேர்ந்தது சம்பந்தமாக கம்பெனிக்கு 05.01.2016 இல் தான் தெரிவித்தேன். நான் சார்ந்த

தொழிற்சங்கம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் எந்த ஒப்பந்தமும் போடவில்லை. நான் இந்த மனுவில் கோரி இருக்கும் தொகையானது தொழிலாளர் குழுவிற்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் அடிப்படையில் என்றால் ஆமாம். தொழிலாளர் குழு விடம் ஏற்பட்ட ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு நிர்வாகத்திற்கு கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. நான் சார்ந்த சங்கம் மூலமாக ஊதிய உயர்வு கேட்டு தொழிற்தாவா எழுப்பினேன் என்றால் ஆமாம். அந்த தொழிற்தாவா முன்னிலைக்கு நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டதா என்றால் இல்லை. தொழிலாளர் குழுவில் நான் உறுப்பினர் இல்லை என்றால் ஆமாம். தொழிலாளர் குழுவிற்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட 4 ஒப்பந்தமானது சட்டப்பிரிவு 18(1) கீழ் ஏற்படுத்தப்பட்டது என்றால் ஆமாம். 18(1) கீழ் ஏற்பட்ட ஒப்பந்தமானது உறுப்பினர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றால் ஆமாம். நான்கு ஒப்பந்தங்கள் எனக்கும் பொருந்தும் என நீதிமன்றம் உத்தரவு எதுவும் பிறப்பித்துள்ளதா என்றால் இல்லை. மூர்த்தி, நந்தகோபால், லோகநாதன், பெருமாள் ஆகியோர் தொழிலாளர் குழு ஏற்படுத்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தார்கள் என்றால் ஆமாம். பிறகு மேற்படி நால்வரும் நிர்வாகத்திற்கு மேற்படி ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாக தனித்தனியான கடிதம் கொடுத்தார்கள் என்றால் ஆமாம். நானும் அது போன்று ஒரு கடிதத்தை நிர்வாகத்திடம் கொடுத்திருக்கிறேனா என்றால் கொடுத்துள்ளேன். 06.06.2023 ல் கொடுத்தேன். அதனை நேரடியாக சென்று கொடுத்த போது ஏற்றுக்

கொள்ளாத காரணத்தினால் பதிவு தபால் மூலம் அனுப்பினேன் 08.06.2023 ல் அனுப்பினேன். அது ம.சா.ஆ.**19** என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தில் நான்கு ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்வதாக சொல்லி இருக்கிறேனா என்றால் இல்லை. மேலே குறிப்பிட்ட நால்வருக்கும் அவர்கள் எந்த தேதியில் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாக குறிப்பிட்டு கடிதம் கொடுத்தார்களோ அந்த தேதியில் இருந்து தான் தொகையை கணக்கிட்டு வழங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இன்றைய தேதியில் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள தயாராக இருப்பதாக தெரிவித்து கடிதம் கொடுக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். எந்த தேதியில் நான் கடிதம் கொடுக்கிறேனோ அந்த தேதியில் இருந்து தொகை கணக்கிட்டு வழங்க நிர்வாகம் தயாராக இருக்கிறது என்றாலும் அதனை ஏற்றுக் கொள்ள நான் தயாராக உள்ளேனா என்றால் இல்லை. நான்கு ஒப்பந்தங்களும் சட்டப்பிரிவு 18(1) கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கும் காரணத்தினால் அதில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமே அது பொருந்தும் என்றாலும் எனக்கு பொருந்தாது என்றாலும் சரியல்ல. 2016 ஆம் ஆண்டு உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டேன் என்றால் ஆமாம். DCL முன்பு அது சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட பேச்சுவார்த்தை தான் ம.சா.ஆ.**7** என்றால் ஆமாம்.மேற்படி ஆவணத்தில் நான் உள்பட மூன்று தொழிலாளர்களின் நடவடிக்கைகளை மூன்று மாதங்கள் வரை கண்காணித்து அதன் பிறகு நிர்வாகம் பணி நிரந்தரம் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை தற்காலிகமாக முடிக்கப்பட்ட நேரம் 12:18p.m.

குறுக்கு விசாரணை மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.55 p.m.

என்னிடம் காட்டப்படும் கணக்கீட்டின் அடிப்படையில் தான் நந்தகோபாலுக்கு நிர்வாகம் செட்டில்மென்ட் செய்தது என்றால் ஆமாம். அது எ.சா.ஆ.**1.** என்னிடம் காட்டப்படும் கணக்கீட்டின் அடிப்படையில் தான் மூர்த்திக்கு நிர்வாகம் செட்டில்மென்ட் செய்தது என்றால் ஆமாம். அது எ.சா.ஆ.**2.** 04.03.2023 அன்று நந்தகோபால், மூர்த்தி, லோகநாதன் ஆற்றிய மூவரும் தொழிலாளர் குழு ஏற்படுத்திய ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டு கடிதம் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. நான் வேலையில் இருந்த காலகட்டத்தில் நிர்வாகத்திடம் மூன்று முறை மன்னிப்பு கடிதம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். அவை என்னிடம் காட்டப்படும் மன்னிப்பு கடிதங்கள் தானா என்றால் ஆமாம். 30.01.2015 தேதியிட்ட கடிதம் அது எ.சா.ஆ.**3.** 30.11.2015 தேதியிட்ட கடிதம் அது எ.சா.ஆ.**4.** 25.05.2016 ல் நிர்வாகம் எனக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கியது என்றால் தெரியவில்லை. தொழிலாளர் குழு ஏற்படுத்திய ஒப்பந்தத்தை நான் இன்றைய தேதி வரையில் ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் அது எனக்கு பொருந்தாது என்றால் சரியல்ல. நான் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என சொல்லவில்லை ஆனால் எந்த தேதியில் கடிதம் கொடுததேனோ அந்த தேதியில் இருந்து தான் தொகை கணக்கிட்டு வழங்கப்படும் என்ற நிர்வாகத்தின் நிலையை தான்

ஏற்றுக்கொள்ளவில்லை. நான் செய்து வந்த வேலையின் தன்மையும் 18(1) கீழ் ஒப்பந்தத்தில் உள்ள தொழிலாளர்களின் வேலையின் தன்மையும் வெவ்வேறு ஆனவை என்பதால் அந்த ஒப்பந்தம் என்னை கட்டுப்படுத்தாது எனக்கு பொருந்தாது என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தம் எனக்கு பொருந்தும் என நான் எந்த நீதிமன்றத்திலும் உத்தரவு வாங்காத காரணத்தினால் இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நந்தகோபால், மூர்த்தி, லோகநாதன் ஆகியோருக்கு வழங்கிய பலன்களை போன்று நிர்வாகம் வழங்க தயாராக இருந்தால் ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.09.03 19:03:41 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:01.09.2025.